# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,227 — 1964 නොවැම්බර් 16 වැනි සඳුද — 1964.11.16**

14,227 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ந் திகதி திங்கட்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

**1964 ம் ஆண்டின் உணவு விலைக்கட்டளை இலக்கம் ஜீ. 7.** **சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச் சீனி.**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) கார்த்தியே புஞ்சிஹேவகே புத்ததாஸா த சில்வா ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ம் திகதி வெளியான 13,728 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 7 ம் திகதியையுடைய 1963 ம் ஆண்டின் ஜீ. 6 ம் இலக்க எனது உணவு விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 2 ம் பத்தியிற் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்குள்ள விலைகள் 1 அந்தருக்கு மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விலையாகவும் இதை மீறி முதலாம் அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் இரண்டாம் அட்டவணையில் முதலாம் பத்தியில் கூறிய காலி மாவட்ட அதிகாரியின் ஆட்சிக்கு உட்பட்ட இடப்பரப்புகளில் விற்பனையாகக் கூடாதெனவும்.

(3) இரண்டாவது அட்டவணையில் 3 ம் பத்தியில் தரப்பட்டுள்ள விலைகள் ஒரு சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை றுத்தல் ஒன்றிற்கு எனவும் அப்பொருட்களை வாங்கும் வழமையாளருக்கெனவும் இவற்றை மீறி முதலாவது அட்டவணையிற்குறிக்கப்பட்டுள்ள பொருள்கள் இரண்டாவது அட்டவணையின் முதலாம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள காலி மாவட்ட அதிபரின் ஆட்சிக்குட்பட்ட இடப்பரப்புகளில் விற்பனையாகக் கூடாதெனவும் ஆக்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்கு—

(அ) முதலாவது அட்டவணையிற்குறிக்கப்பட்டுள்ள பொருட்களின் மொத்த விற்பனை என்பது திரும்ப விற்பனையாகும் எந்த ஒரு தொகையையும் அல்லது 1 அந்தர் தொகை அல்லது அதற்கும் கூட உள்ள விற்பனையையும் குறிக்கும்.

(ஆ) முதலாவது அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள பொருட்களின் சில்லறை விற்பனை என்பது வாங்குபவரினது பாவிப்பிற்கு விற்கப்படும் 1 அந்தரிலும் குறைந்த தொகையின் விற்பனையைக் கருதும்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை அதிகாரிக்கப்பட்டுள்ள எந்த் இடப்பரப்புள்ளும் எவரும் முதலாவது அட்டவணையின் கூறிய பொருளை கலப்படமாக்கி விற்றலாகாது.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை அதிகாரிக்கப்பட்ட எந்த இடப்பரப்புள்ளும் முதலாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ள பொருளை தன்வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்ததொரு கொள்கலத்தில் அப்பொருளினது சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் 1 அங்குலத்தில் குறையாத எண்களில் அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதப்பட்டு அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் கொள்பவர் நன்கு பார்க்கத் தகுந்தவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகவும் பார்வைக்கு வைக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்கு "இறுத்தல்" அல்லது "இறு" என்பது அவோர்டு போஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாக கருதப்படுமென ஆக்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் முதலாவது அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள பொருளை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று வழங்குதல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.;—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்கப்பட்ட பொருட்களின் அளவு,

(இ) விற்றபொருளுக்கு கொடுக்கப்பட்ட விலை,

(ஈ) எவ்விதமான விற்பனை—மொத்தமாகவா—சில்லறையாகவா.

(9) முதலாவது அட்டவணையிற் கூறிய பொருட்கள் விற்கப்படும் பொழுது அவ்வாறு விற்கும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் யாதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அந்த ஆகக்கூடிய விலையுள் அடங்கு மென ஆக்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் திகதி பி.ப.3 மணிக்கு காலிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

கே. பி. பி. த சில்வா,
உதவிக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
காலி மாவட்டம்.

முதலாவது அட்டவணை

விவரணையும் தரமும்—சுத்திகரிக்கப்பட்ட வெள்ளைச்சீனி.

இரண்டாவது அட்டவணை

| பத்தி 1<br>எல்லைகள் | பத்தி 2<br>1 அந்தருக்கு ஆகக்கூடிய மொத்த விற்பனவு விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>1 ருத்தலுக்கு ஆகக்கூடிய சில்லறை விற்பனவு விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| காலி மாநகரசபை எல்லைகள் (F) போர் (G) கிருவற்ஸ் எல்லைகள் உட்பட | 72 90 | 0 68 |
| அக்மிமான கிராம சபை எல்லை<br>(B) போப் கிராம சபை எல்லை<br>பொட்டல கிராம சபை எல்லை | 72 90 | 0 68 |
| அம்பலாங்கொட நகரசபை எல்லை<br>வத்துகெதற பட்டின சபை எல்லை<br>வீறகொட கிராம சபை எல்லை<br>(B) பற்றபொல கிராம சபை எல்லை<br>கறனடெனியா கிராம சபை எல்லை<br>மாதம்பை கிராம சபை எல்லை | 72 76 | 0 67½ |
| ஆள்கம பட்டின சபை எல்லை<br>ஹபருதுவ கிராம சபை எல்லை<br>கடாகொட கிராம சபை எல்லை<br>கொற்ருவ கிராம சபை எல்லை<br>கள்ளஹுவ கிராம சபை எல்லை | 72 95 | 0 68 |
| நெயஹுவா கிராம சபை எல்லை<br>ஒபாத கிராம சபை எல்லை<br>ஹினிடும கிராம சபை எல்லை | 73 10 | 0 68 |
| வந்துரம்பா கிராம சபை எல்லை<br>(B) பத்தேகம கிராம சபை எல்லை<br>தெலிகடமஜவன கிராம சபை எல்லை | 72 86 | 0 68 |
| பிற்றிகலவை ஹின கிராம சபை எல்லை<br>பொட்டிவல நியாகம கிராம சபை எல்லை<br>வெலிவிற்றிய-டிவித்துற கிராம சபை எல்லை | 72 95 | 0 68 |
| டொடண்டுவ பட்டின சபை எல்லை<br>றற்கம கிராம சபை எல்லை | 72 81 | 0 68 |
| ஹிக்கடுவ பட்டின சபை எல்லை<br>ஹிக்கடுவ கிராம சபை எல்லை | 72 77 | 0 67½ |
| (B) பலப்பிற்றியா பட்டின சபை எல்லை<br>உறகஸ்மன் ஹன்டியா கிராம சபை எல்லை | 72 75 | 0 67½ |
| எல்பிற்றியா பட்டின சபை எல்லை<br>எல்பிற்றியா கிராம சபை எல்லை | 72 80 | 0 68 |
| நாகொட கிராம சபை எல்லை | 72 96 | 0 68 |
| கொஸ்கொட கிராம சபை எல்லை | 72 69 | 0 67½ |
| (B) பெனரேற்ற கிராம சபை எல்லை | 72 63 | 0 67½ |

**குறிப்பு.**—மேற் காட்டிய விலைகள் கட்டுப்பாட்டு நிதான விலைகள் அல்ல; அவைகள் வெள்ளைச் சீனி **ஆகக்கூடுதலாக** விற்கப்படக்கூடிய விலைகளாகவும் அவற்றிற்கு மேலே விற்கப்படாது இருக்கவேண்டியதையுமே குறிப்பன.

11–650

---

உணவு விலைக்கட்டளை இல : கேயு/51/64. **கோதுமை மா.**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

அத்தியாயம் 173 விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு குருநாகல் பரிபாலன மாவட்டத்திற்கு உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சார்ல்ஸ் அபேசிர ஆகிய நான் இக்கட்டளையால்.—

(1) 1963 ம் ஆண்டு ஒகஸ்து மாதம் 14 ம் திகதியைக்கொண்ட, 13,728 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 1963 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ம் திகதியிட்ட கேயு 40/63 இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக நிராகரித்து விடுகிறேன்;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட கோதுமை மாவை இந்த விலைக்கு கூடுதலாக அட்டவணையில் 2 ம் பத்தியில் சொல்லப்பட்ட பகுதிகளில் விற்கலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள கோதுமை மாவை 148 இருத்தல் அல்லது அதற்கு மேலோ விற்றலும் அட்டவணையில் சொல்லப்பட்ட கோதுமை மாவை திரும்பி விற்பதற்காக விற்றலும் மொத்த விற்பனையாகவே கருதப் படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) அட்டவணையில் 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட கோதுமை மாவை 148 இருத்தலுக்கு குறைவாக பாவிப்பாளருக்கு விற்றலும் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) " கோதுமை மா " என்பது கோதுமை மாவும் சோளம் மாவும் கலந்தவை ;

(4) சோளம் மாவைத் தவிர வேறு எப்பொருளையும் கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) சோளம் மாவையும் கோதுமை மாவையும் கலந்து விற்கும் பொழுது 10 வீத நிறைக்கு மேற்பட்ட சோளம் மாவை கோதுமை மாவுடன் கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட கோதுமை மாவை விற்குமிடத்து குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் கோதுமை மாவை சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட கோதுமை மாவை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட கோதுமை மாவையும் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றுகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(9) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட கோதுமை மாவை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில், விபரிக்கப்பட்ட கோதுமை மாவை சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கோதுமை மாவின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா ? அல்லது சில்லறை விற்பனையா ?

1964 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ந் திகதியன்று குருநாகல் கச்சேரியில் பிற்பகல் 3 மணிக்குக் கைபொப்பமிடப்பட்டது.

சா. அபேதீர,
உபவிலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
குருநாகல் மாவட்டம்.

## அட்டவணை

| பத்தி 1 விபரம் | பத்தி 2 பகுதி | பத்தி 3 மொத்த வியாபாரி ஒருவர் 148 இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய விலை ரூ. ச. | பத்தி 4 சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|
| கோதுமை மா | குருநாகல் மாநகரசபை பகுதி | 34 30 | 0 24½ |
| | குளியாப்பிட்டியா நகரசபை பகுதி | 34 79 | 0 25 |
| | பொல்காவல பட்டின சபை பகுதி | 34 49 | 0 24½ |
| | கிராமச் சங்கப் பகுதிகள்— | | |
| | அலாவுவ | 34 71 | 0 24½ |
| | பிங்கிரியா | 34 87 | 0 25 |
| | போயகனே | 34 30 | 0 24½ |
| | தம்பதேனியா | 34 65 | 0 24½ |
| | தொடங்கஸ்லந்த | 34 55 | 0 24½ |
| | டும்மலசூரிய | 34 90 | 0 25 |
| | கொக்கறெல்ல | 34 52 | 0 24½ |
| | கெமன்கல | 34 79 | 0 25 |
| | கெற்றிபொல | 34 76 | 0 25 |
| | கிரிப்பிற்றியா | 34 73 | 0 24½ |
| | கொறம்வாவ | 34 79 | 0 25 |
| | கலுகமுவ | 34 38 | 0 24½ |
| | கனேகம | 34 71 | 0 24½ |

அட்டவணை—(தொடர்)

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>பகுதி | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் 148 இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| கோதுமை மா | மாகண்டுறை | 34 97 | 0 25 |
| | முறுதென்க | 34 79 | 0 25 |
| | நாறமல | 34 52 | 0 24½ |
| | பன்னல | 34 99 | 0 25 |
| | பிட்மே | 34 79 | 0 25 |
| | பில்லச | 34 38 | 0 24½ |
| | பொல்காவல | 34 49 | 0 24½ |
| | பொத்துகற | 34 30 | 0 24½ |
| | றம்பொடகல | 34 63 | 0 24½ |
| | உடுபத்தாவ | 34 90 | 0 25 |
| | வாறியப்பொல | 34 55 | 0 24½ |
| | வெல்லவ | 34 30 | 0 24½ |
| | வேயுட | 34 38 | 0 24½ |
| | அம்மன்பொல | 34 58 | 0 24½ |
| | பலால | 34 58 | 0 24½ |
| | எகிருவேவ | 34 99 | 0 25 |
| | கல்கமுவ | 34 77 | 0 25 |
| | மகன்னனேறியா | 34 77 | 0 25 |
| | மகோ | 34 58 | 0 24½ |
| | நிக்கவறெட்டியா | 34 77 | 0 25 |
| | பொல்பிற்றிகம | 34 85 | 0 25 |
| | தம்பொறம்புவ | 34 77 | 0 25 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

148 நிகர இருத்தலுக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ விற்கப்படுமிடத்து அத்தொகையின் ஆகக்கூடிய விலை மேலே குறிப்பிட்ட 148 நிகர இருத்தலுக்கு உரிய ஆகக்கூடிய மொத்த விலையைக் கொண்டு சராசரியாகக் கணிக்கப்பட வேண்டும்.

11–651

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.